பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 12 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் குவைத் பயணத்தின் போது இந்தியா – குவைத் இடையே நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2. நல்லாட்சிக்கான வழிமுறைகள் என்ற தேசிய அளவிலான கருத்தரங்கை மத்திய அரசு பணியாளர் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

3. தேசிய விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. காஸா பகுதியில் நேற்று இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 32 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

5. மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இதுவரை ஆயிரத்து 602 ரன் எடுத்து, **Smriti Mandhana** சாதனை படைத்துள்ளார்.

**>>>><<<<**

இரண்டு நாள் பயணமாக குவைத் சென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி,நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

இந்த பயணத்தின் போது நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

பாதுகாப்பு, கலாச்சார பரிவர்த்தனை உள்ளிட்ட இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறை ஒப்பந்தத்தின் படி, ராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது, இருநாட்டு ராணுவத்தினரும் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுவது, பாதுகாப்புத் துறை தளவாடங்கள் ஏற்றுமதி உள்ளிட்டவை மேற்கொள்ளப்படும்

2025-29ஆம் ஆண்டு காலகட்டத்தில் இரு நாட்டு மக்களிடையே கலாச்சார உறவுகள் வலுப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இசை, நடனம், இலக்கியம், நாடகம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு கலாச்சார விழாக்கள் நடைபெறவுள்ளன.

2025-28ஆம் ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையே விளையாட்டுத்துறை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் சூரிய மின்சக்தி துறையில் பல்வேறு ஒத்துழைப்புகளுக்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கபடட்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை இருநாடுகளும் வன்மையாக கண்டிப்பதாகவும், தீவிரவாத செயல்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் தரப்படும் நிதிசார்ந்த விஷயங்களை தடை செய்வது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, குவைத் நாட்டு பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மத்திய அரசின் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், அரசு பணிகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 71 ஆயிரம் பேருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்.

பின்னர், புதிதாக பணியில் சேர்ந்தவர்களிடம் அவர் உரையாடுகிறார்.

இதற்கான நிகழ்ச்சிகள் இன்று நாடுமுழுவதும் 45 இடங்களில் நடைபெறுகின்றன. இதில் மத்திய அமைச்சர்கள் மற்றும் இணையமைச்சர்கள் பணி ஆணைகளை வழங்கவுள்ளனர்.

அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள இடங்களுக்கு தகுதியான நபர்கள் மத்திய அரசு தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் 2022-ம் ஆண்டு முதல் அரசு பணிகளில் லட்சக்கணக்கானோர் இணைந்துள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் பணியாளர்கள், உள்துறை அமைச்சகம், உயர்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் குடும்பநல அமைச்சகம், நிதித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்ற உள்ளனர்.

>>>>>><<<<<<

நல்லாட்சிக்கான வழிமுறைகள் என்ற தேசிய அளவிலான கருத்தரங்கை மத்திய அரசு பணியாளர் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இன்று தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த கருத்தரங்கில், மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு கண்காட்சியையும் அமைச்சர் திறந்து வைக்கிறார்.

>>>>>><<<<<<

சிறந்த சுற்றுலா மாநிலமாக மத்தியப்பிரதேசம் திகழ்வதாக அமெரிக்காவின் **Wall Street** பத்திரிகை தெரிவித்துள்ளது.

உலக சுற்றுலா தலங்களுக்கு செல்லுங்கள் – என்ற அடிப்படையில் அம்மாநிலத்தின் பாரம்பரிய கலாச்சாரம், வன உயிரினங்கள், இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள் ஆகியவற்றை அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதற்கு அம்மாநில சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறையின் மேலாண் இயக்குநர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு. **Sheo Shekhar Shukla** மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், சுற்றுலா பயணிகள் அதிக அளவில் மாநிலத்திற்கு வருவார்கள் என்றும், யுனெஸ்கோவின் உலக பாரம்பரியமான இடங்கள், புலிகள் காப்பகம், கலாச்சார நிகழ்வுகள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு புதுமையான அனுபவத்தை தரும் என்றும் அவர் கூறினார்.

யுனெஸ்கோ பாரம்பரிய இடங்களான கஜுராஹோ, பன்னா, பாண்டவகார்க் ஆகிய இடங்கள் மத்தியப்பிரதேச மாநிலத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளதாக திரு. **Shukla** தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் விவசாயிகளுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் இந்த நாளில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் உணவு பாதுகாப்பு, கிராமப் பொருளாதாரம் மற்றும் பாரம்பரிய வேளாண்மையை தொடர்வது ஆகியவற்றில் விவசாயிகளின் பங்கு அளப்பரியது.

விவசாயிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மத்திய அரசு அவர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேலும் நிலையான வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதத்தில் அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இந்திய பங்குச் சந்தைகளில் டிசம்பர் மாதத்தில் 26 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய பங்குச் சந்தைகளில் 21 ஆயிரத்து 789 கோடி ரூபாயும், இந்திய கடன் சந்தைகளில் 4 ஆயிரத்து 646 கோடி ரூபாயும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் மாதத்தில் 26 ஆயிரத்து 435 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் இந்திய பங்குச் சந்தைகளில் 57 ஆயிரத்து 724 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது.

மொத்தத்தில் இந்த ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்திய பங்குச் சந்தைகளில் அந்நிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

நெல்லை மாவட்டத்தில் கேரளாவிலிருந்து மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன.

இதன் காரணமாக, 5 பேர் கைது செய்யப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கேரள அரசு சார்பில் சுத்தமல்லி, முக்கூடல், சீதபற்பநல்லூர், முன்னீர்பள்ளம் ஆகிய பகுதிகளில் கொட்டப்பட்டிருந்த கழிவுகளை 18 லாரிகள் மூலம் கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

திருவனந்தபுரம் உதவி ஆட்சியர் திருமதி. சாக்ஷி தலைமையில்,50 பேர் கொண்ட குழுவினர் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் திரு. கார்த்திகேயன் தலைமையில் ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டு இந்தக் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

காஸா பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 32 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

மேலும், 54 பேர் பலத்த காயமடைந்ததாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக சர்வதேச அமைப்புகள் முயற்சிகளை எடுத்து வரும் நிலையில், இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பள்ளி ஒன்றில் தங்கியிருந்த மக்கள்மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதில் 8 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி தொடங்கிய இந்த சண்டையில் காஸா பகுதியில் இதுவரை 45 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், லடாக், பல்திஸ்தான், மொஸாஃபராபாத் உள்ளிட்ட பகுதிகளில் வானிலை மிகவும் மோசமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, ஒடிசா, மேற்குவங்கம், சிக்கிம், ராஜஸ்தான், மணிப்பூர் மலைப்பகுதிகளில் இரவிலும், காலை நேரங்களிலும் கடுமையான பனிமூட்டம் நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஆந்திரப்பிரதேசம், ராயலசீமா ஆகிய இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு பனிமூட்டம் அதிகமாக இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வதோதராவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 314 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Smriti Mandhana** 91 ரன் எடுத்தார். இவர் இதுவரை ஆயிரத்து 602 ரன் எடுத்து, மகளிர் கிரிக்கெட்டில் சாதனை படைத்துள்ளார்.

315 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ், தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி, 26 புள்ளி இரண்டு ஓவரில் 103 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

**Renuka Singh** அபாரமாக பந்துவீசி, 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம், நாளை நடைபெறவுள்ளது.

**>>>>>><<<<<<**

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் தமிழக அணி – பெங்களூரு அணியையும், ஹரியானா – மும்பை அணியையும் வென்றன.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் குஜராத் - தில்லி அணியையும், புனே – தமிழக அணியையும் எதிர்கொள்கின்றன.

**>>>>>><<<<<<**

திருவண்ணாமலையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கராத்தே போட்டிகளில் 600க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஐந்து பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் அடுத்த மாதம் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

**>>>>>>END<<<<<<**